சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

## 27-10-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : JVP அமைப்பினை விளங்கிக்கொள்ளல்.
## தொடக்கவுரையாடல் : சி. கா. செந்திவேல்

* தோற்றம் 1965, ஆரம்பமே இரகசிய இளைஞர் இயக்கமாகவே ஆரம்பிக்கப்பட்டது. மார்க்சியப் பாதையில் புரட்சியின் மூலம் அதிகாரத்தை பிடிப்பது என்பதே ஜே.வி.பி யின் நோக்கமாக இருந்தது. அதற்காக 5 வகுப்புக்கள் நடத்தப்பட்டன. முதலாவது வகுப்பு முதலாளித்துவம் பற்றியது. ஐந்தாவது வகுப்பு இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றியது. இந்த ஐந்து வகுப்புகளின் மூலமாக குறிப்பாக இளைஞர் யுவதிகள் அணிதிரட்டப்பட்டனர் அவர்கள் போராட்டங்களுக்கும் புரட்சிக்கும் பிரதான சக்தியாக்கப்பட்டனர்.

* 1971ல் ஏப்ரல் 5ம் திகதி கிளர்ச்சி ஆரம்பம். இதற்கு ஒரு வாரத்திற்கு முன் விஜயவீரா கைது செய்யப்பட்டார். வடக்கு கிழக்கு தவிர ஏனைய பகுதிகளில் ஜே.வி.பி கிளர்ச்சி இடம்பெற்றது.ஐந்தாயிரம் முதல் இருபதாயிரம் வரையான இளைஞர் யுவதிகள் மற்றும் மக்கள் கொல்லப்பட்டனர்.பல ஆயிரம் வரை சிறையில் அடைக்கப்பட்டனர்.

* 1970-77வரை ஐக்கிய முன்னணி ஆட்சி. 1977ல் UNP ஆட்சி இதன்கீழ் 1978ல் விஜயவீராவையும் ஏனையோரையும் விடுதலை செய்தது.

* பாராளுமன்றப் பாதையில் ஜே.வி.பி யும் றோகணவும் செயற்பட்டனர்.

* 1982ல் ஜனாதிபதித் தேர்தலில் விஜயவீரா போட்டியிட்டு தோல்வி கண்டார்.

* அதன் பின்னர் இரகசியமாக அடுத்த கிளர்ச்சிக்குத் தயாரிப்பு. முன்னயது போலன்றி நவீன ஆயுதங்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

* தனிநபர் படுகொலைகள் செய்தனர். மாற்றுக் கட்சியின் புத்திஜீவிகள், தனிநபர்கள் கொல்லப்பட்டனர்.

* 1983ல் இன வன்செயலைத் தொடர்ந்து ஜே.வி.பி தடை, ரோஹன விஜயவீரா தலைமறைவு.

* 1987-1989 இரண்டாவது கிளர்ச்சி.

* இக்கிளர்ச்சியில் சுமார் 60000 பேர்வரை கொல்லப்பட்டனர், மேலும் பல ஆயிரம் பேர்வரை காணாமல் போயினர்.

* மத்திய குழுவில் ஒரே ஒருவரே எஞ்சினார்.அவரே சோமவன்ச அமரசிங்கவாவார்.

* ஜே.வி.பி முற்றாக நசுக்கி அழிக்கப்பட்டது.

* 1990களின் ஆரம்பத்தில் மிக இரகசியமாக ஜே.வி.பி யின் இளைஞர் அணி செயல்பட ஆரம்பித்தது.

* 1994ல் தோற்கடிக்கப்பட்டு பொதுசன முன்னணி பதவிக்கு வந்தது

* 1994ல் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் பெயரில் தெற்கில் ஒரே பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு.

* பொதுசன முன்னணி ஆட்சியில் படிப்படியாக ஜே.வி.பி மீள உயிர்த்துக் கொண்டது.

* 2000ம் ஆண்டுத் தேர்தலில் ஜே.வி.பி எட்டு ஆசனங்களை பெற்றுக்கொண்டது.

* 2004ல் 39ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து பெற்றுக்கொண்டது.

* 3 அமைச்சர்கள் பெற்றனர். விவசாயம், நீர்பாசனம், கலாச்சாரம் ஆகியவற்றை பெற்றன.

மிகுதி அடுத்த பக்கம்..

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

OccupyWallStreet
03-11-2011 | விஜயகுமார் சுகுமாரன்

**ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள்**
10-11-2011 | பொது உரையாடல்

**சமஸ்கிருத மயமாக்கம்**
17-11-2011 | சத்தியதேவன்

**சோதிடம்**
24-11-2011 | மௌ. மதுவர்மன்



07/11

கோதண்டராம நடேசையர் *(K. Natesa Iyer) 1887 - நவம்பர் 7, 1947)* தமிழகத்தில் பிறந்து இலங்கையின் மலையகத்தில் குடியேறிய தமிழறிஞர், பதிப்பாளர், அரசியல்வாதி, இதழாசிரியர், எழுத்தாளர். 1924 முதல் இலங்கை சட்டசபையிலும், பின்னர் இலங்கை அரசாங்க சபையிலும் உறுப்பினராக இருந்தவர்.

1930-இல் மலையகத்தின் தோட்டத்தின் அடிவாரத்தில் குடியமர்ந்தார். தோட்டங்கள் தோறும் சென்று மக்களிடையே உரையாற்றி அம்மக்களை அடிமைத்தனத்திலிருந்து தட்டியெழுப்பினார். நடேசய்யரின் இப்பெரும் பணியில் தோள் கொடுத்த பெருமை, அவரின் மனைவி மீனாட்சி அம்மையையே சாரும்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

## JVP அமைப்பினை விளங்கிக்கொள்ளல்

*முன்பக்கத் தொடர்ச்சி..*

* ஒரு வருடத்திற்குள் அரசாங்கத்தை விட்டு வெளியேறினர்.

* அதன்பின் மஹிந்த சிந்தனையை வடிவமைத்ததில் பிரதான பங்கு பெற்றனர்.

* அதே மஹிந்த சிந்தனை ஜே.வி.பி யை இரண்டாக உடைத்தது. விமல் வீரவன்சா தலைமையில் தேசிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் அவர் அமைச்சராகின்றார் அவருடன் 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரிந்து சென்றனர்.

* 2010தேர்தலில் 5 உறுப்பினர் தெரிவாகின்றனர்.

இந்திய முதலாளிகளின் ஆதிக்கம் விரிவாகக் காட்டப்பட்டது. இந்தியக் கம்பனிகள் பெயரிடப்பட்டன.

புறக்கோட்டை குட்டி மெட்ராஸ் என்றே சுட்டிக்காட்டப்பட்டது.

தோட்டத் தொழிலாளிகள் இந்திய விஸ்தரிப்பு வாதிகளின் ஒரு பகுதியினர் என்று கூறினர்.

வசதியாக வாழ்கின்றனர், நல்ல சம்பளம், வீடு, கல்வி, இவர்கள் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள். கள்ளக்குடியேற்றக்காரர்கள்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தாய்நாடு உண்டு. மக்கள் விடுதலை முன்னணி அவர்கள் இங்கு இருப்பதையும் இந்நாட்டைச் சொந்தமாக்க நினைப்பதையும் நிச்சயமாக எதிர்க்கின்றது

*ஜே.வி.பி யின் வர்க்க நிலைப்பாடு*

1. ஜே.வி.பி இளைஞர் யுவதிகள் மாணவர்கள் என்போரை முதன்மைப்படுத்திய ஒரு கட்சி. இது குட்டி முதலாளித்துவ அல்லது சிறு முதலாளித்துவ குணாம்சம் கொண்ட கட்சி. தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கருத்தியல் நிலைப்பாடு கிடையாது.

2. அதனால் மாக்சையும் லெனினையும் மட்டும் உச்சரித்து செங்கொடி அரிவாள் சம்மட்டி என்பவற்றுடனும் சேகுவேரா பற்றியும் வெறும் புரட்சிகர முழக்கங்களைக் கொண்டிருந்தமையாகும்.

3. வெறுமனே முதலாளித்துவத்தை வீழ்த்தி சோசலிசத்தை ஏற்படுத்துவதாகக் கூறிய ஜே.வி.பி இலங்கையின் சமூக அமைப்பு அதற்கான கருத்தியல் அதன் அடிப்படையிலான ஆளும் வர்க்கத் தன்மைகள் பற்றிய தெளிவும் புரிதலும் அதனிடம் இருக்கவில்லை.

4. அதனால் அதன் முழக்கங்கள் புரட்சிகரம் போன்று தோன்றினாலும் சாராம்சம் அவ்வாறிருக்கவில்லை. தொழிலாளி வர்க்கத் தலைமை ஐக்கிய முன்னணி, புரட்சிகர எழுச்சி வெகுஜன அணிதிரட்டல் போன்றவை நிராகரிக்கப்பட்டவையாகவே இருந்து வந்தன. இவை விஜயவீராவின் பலவீனங்கள். இவை எதிர்புரட்சிகர சக்திகளுக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் வாய்ப்பானவையாக அமைந்தன.

5. பிரதானமாக அதிதீவிர இடதுசாரித்தனமும் அதிலிருந்து அடுத்த முனைக்கான வலது சந்தர்ப்பவாதமும் ஜே.வி.பி யை மாறி மாறி வீழ்த்தி இன்றைய நிலைமைக்கு கொண்டுவந்து விட்டுள்ளது.

6. இங்கே ஜே.வி.பி தலைமையையும் அதன் கீழ்மட்ட அணியில் நம்பி ஏமாந்து கொண்ட இளம் சக்திகளையும் பிரித்துப் பார்ப்பது அவசியம்.

7. ஜே.வி.பி இற்குள் இருந்து வர்க்க சக்திகளாகவும் நேர்மையான மார்க்சிஸ் லெனினிஸ்ட் சக்திகளாகவும் வெளிவரக் கூடியவர்களை அடையாளம் கண்டு அவர்களை அரசியல் மயப்படுத்தி அமைப்பு ரீதியாக அணிதிரட்டவேண்டியது காலத்தின் தேவையாகும்.

## வோல் ஸ்ட்ரீட் முற்றுகை - நாங்கள் 99%

*03-11-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு*
*( விஜயகுமார் சுகுமாரன்)*

அமெரிக்க முதலாளியத்தினதும் உலக முதலாளியாத்தினதும் நெருக்கடியின் அண்மைக்கால உச்ச பிரதிபலிப்பாக வோல் ஸ்ட்ரீட் முற்றுகை போராட்டம் செம்டம்பர் 17ம் திகதி முதல் இடம்பெற்று வருகிறது. அமெரிக்காவில் நிவ்யோர்க் நகரின் வோல் ஸ்ட்ரீட்டில் மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் அமெரிக்காவின் 70 முக்கிய நகரங்களில் இடம்பெற்றுவருகின்றது. உலகம் பூராகவும் பல நகரங்களில் (900 நகரங்களில் என வோல் ஸ்ட்ரீட் முற்றுகையின் உத்தியோக பூர்வ இணையதளம் குறிப்பிடுகிறது) இப்போராட்டத்தை ஆதரித்து ஆர்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. முதலாளித்துவத்தின் கருவறையை முற்றுகையிட்டுள்ள இந்த போராட்டத்தை முறியடிப்பதற்கு பெருவணிக நிறுவனங்களும் அதற்கு சார்பான ஊடக நிறுவனங்களும் பல முனை தந்திரோபாயங்களை வகுத்து முயற்சி எடுத்து வருவகின்றன. அமெரிக்க ஜனாதிபதி ஒபாம இப்போராட்டத்தை “நம்முடைய நிதியியல் அமைப்புமுறை இயங்கும் விதம் குறித்து மிகவும் பரந்தளவில் ஏற்பட்டுள்ள விரக்திக்கு அவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்” என போராட்டதை திசை திருப்புவதும் நிலைபெற்றுள்ள கட்டமைப்பை பேணுவதும் என தந்திரோபாயத்தை அரங்கேற்றி வருவதுடன் பெருவணிக நிறுவனங்களுடனான தனது உறவின் பிடியை விட்டுக்கொடுப்பின்றி பலப்படுத்தி வருகிறார். அரச இயந்திரம் படிப்படியாக தனது போராட்டக்காரர்களுக்கு எதிரான தனது வன்மத்தை கூர்மைப்படுத்த தொடங்கியுள்ளது. இந்த பின்னணியில் எதிர்போராட்டங்களை முறியடித்து போராட வேண்டிய நிலையில் வோல் ஸ்ட்ரீட் முற்றுகை போராட்ட களம் உள்ளது.

வோல் ஸ்ட்ரீட் முற்றுகை போராட்டத்தின்

1. அரசியல் பொருளாதார தத்துவ பின்னணி

2. போராட்டங்களின் எல்லைகள்

3. போராட்ட வடிவங்கள்

4. போராட்ட இலக்குகள்

5. போராட்டத்தின் வரையறைகள் மற்றும் எதிர்காலம்

# பாடிப்பறை

பாடிப்பறை (கவித்துறை நிகழ்வு)

நவம்பர் 10, 2011 காலை 10 மணிக்கு (முழுமதி தினத்தில்)

சுபத்திரன் கவிதை - வைஷ்ணவி.

செ. யோகராஜா ஆய்வுரை : "ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள்"

மொழிபெயர்ப்பு கவிதை - மார்க்ஸ் பிரபாகர்

கவிதை அரங்காற்றுகை - - சுதாகர்
கவியரங்கம்

**சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**